# இந்தியா பெந்தெகொஸ்தே தேவசபை
# THE INDIA PENTECOSTAL CHURCH OF GOD
## தமிழ்நாடு | TAMIL NADU

**Pr. Dr. KINGSLY CHELLAN**
PRESIDENT
PHONE : +91 94882 74557
ADDR : 27/6B BETHANY, MARTHANDAM KANYAKUMARI DISTRICT, TAMILNADU INDIA - 629 165

**Pr. C. SUNDARRAJ JOHNSON**
VICE PRESIDENT
PHONE : +91 94444 71684
ADDR : NO.44/18, V.P.N. COLONY MAINROAD KANNIGAPURAM, CHENNAI, TAMILNADU, INDIA - 600 012

**Pr. S. SOLOMON**
SECRETARY
PHONE : +91 94431 95225
ADDR : CHENTHARAVILAI, ATTOOR, KANYAKUMARI DISTRICT, TAMILNADU INDIA - 629 177

**Pr. JOY ARULRAJ**
JOINT SECRETARY
PHONE : +91 98945 66854
ADDR : ASARIPALLAM, PERVILAI PO NAGERCOIL, KANYAKUMARI DISTRICT TAMILNADU, INDIA - 629 003

**Bro. A. RUBAN**
JOINT SECRETARY
PHONE : +91 98400 91423
ADDR : NO. 16, 1ST STREET, SUBRAMANIPURAM, KOLATHUR, CHENNAI, TAMILNADU, INDIA - 600 099

**Bro. A. INNASIMUTHU**
TREASURER
PHONE : +91 98430 81234
ADDR : 3/1 KIRUBA ILLAM, SENIYAKUDI STREET, WATRAP, VIRUDHUNAGAR, TAMILNADU, INDIA - 626 132

**SENIOR MINISTER**
Pr. J. MATHEWS
Pr. J. J. LAZAR

**MEMBERS**
Pr. Y. Thaaveethu
Pr. Baby Thomas
Pr. T. Christudhas
Pr. P. G. Roy
Pr. Jeyabalan J Devapitchai
Pr. Victor Joseph
Pr. Mariya Susai
Pr. D. Christudas
Pr. M. S. John Rathina Singh
Pr. G. George Ananth
Pr. Johnson. P. Daniel
Pr. Solomon Kennedy
Pr. Thomson Mathews
Pr. David Durai
Br. Enose
Br. Rajarethinam
Br. P. Simson
Br. B. Samson
Br. Raja Kani
Br. Sushil Kumar Mathews
Br. Gurumaran
Br. C. Jaya Zeba
Br. C. Eliza Darving Das
Br. B. Jenkins Bright
Br. M. John Moses Dayan
Br. John Chelliah Selvaraj
Br. Robert Vincent
Br. C. Thirison

TNS25-29/260128017 Date: 28/01/2026

**கர்த்தருக்கு ஸ்தோத்திரம்**

இந்தியா பெந்தெகோஸ்தே தேவ சபை, தமிழ்நாடு
**மாநில செயற்குழு கூடுகை - 22/01/2026**

இந்தியா பெந்தெகோஸ்தே தேவ சபை, தமிழ்நாடு மாநில செயற்குழு கூடுகை 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 22ம் தேதி காலை 10.45 மணிக்கு, மதுரை, திருமங்கலம் IPC தமிழ்நாடு தலைமையகத்தில், மாநில தலைவர் பாஸ்டர் கிங்சிலி செல்லன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பாஸ்டர் சுந்தர்ராஜ் ஜான்சன் அவர்கள் பாடல் ஆராதனை நடத்தினார்கள். அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு இந்தியா பெந்தெகோஸ்தே தேவ சபையின் முன்னாள் தலைவரும் மூத்த போதகருமான பாஸ்டர் J. மேத்தியூஸ் அவர்கள் செயற்குழு கூட்டத்தின் ஆசீர்வாதத்திற்காக ஜெபித்தார்கள்.

மாநில தலைவர் பாஸ்டர் கிங்சிலி செல்லன் அவர்கள் தலைமையுரையில், வருகிற நான்கு ஆண்டுகளுக்கான திட்டங்களை செயற்குழுவிற்கு முன்வைத்தார்கள்.

**அவை வருமாறு:**

1. தமிழகத்தை ஏழு மண்டலங்களாக பிரித்து ஜெபங்கள் நடத்துவதற்காக Prayer and Intercession Board அமைத்தல்.
2. தமிழகத்தின் சபைகள் மற்றும் ஊழியர்களின் புள்ளி விவரங்களை சேகரித்து அங்கீகாரங்கள் வழங்க Administrative and Credential Board அமைத்தல்.
3. மாநில செயற்குழுவின் நிதி திட்டமிடல் மற்றும் கணக்காய்வை மேற்கொள்ள Finance Management Board அமைத்தல்.
4. தமிழகத்தில் சபை வளர்ச்சி மற்றும் இறையியல் கல்வித் திட்டங்களை செயல்படுத்த Education and Church Growth Board அமைத்தல்.
5. வேதாகமக் கல்லூரியை Education and Church Growth Board கீழ் செயல்படுத்துதல்.
6. Zion Christian School தொடர்பான திட்டங்களை வகுத்து துவங்க முயற்சிகள் மேற்கொள்ளுதல்.
7. தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் குறைந்தது ஒரு Mission Area துவங்குவதற்கான ஆவணங்கள் தயாரிக்க Mission Board அமைத்தல்.

8. தர்ம சகாயம் மற்றும் நலிவடைந்தவர்களுக்கான உதவிகளை திட்டமிட்டு செயல்படுத்தவும், தலைமையக வளாகத்தில் கட்டப்பட்டுள்ள Old-age Home கட்டிடத்தில் முதியோர் இல்லம் அமைக்க Charity and Welfare Board அமைத்தல்.

9. தலைமையக வளாகத்தில் நடைபெறும் கட்டுமான மற்றும் பராமரிப்பு பணிகளை கண்காணிக்க Building Construction Board அமைத்தல்.

10. சபைகளுக்கு நேரிடும் காவல் நிலைய மற்றும் நீதிமன்ற வழக்குகளை எதிர்கொள்ள Legal and Crisis Management Board அமைத்தல்.

11. தலைமையக வளாகத்தை மேம்படுத்தி சீரமைப்பதற்கான திட்டங்களை செயல்படுத்துதல்.

மேற்கண்ட திட்டங்களை வருகிற நான்கு ஆண்டுகளில் தற்போதைய நிர்வாகக் குழு இணைந்து செயல்படுத்த வேண்டும் என மாநில தலைவர் பரிந்துரை செய்தார்கள். இத்திட்ட அறிக்கையை செயற்குழு ஏகமனதாக ஏற்றுக்கொண்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, மாநில செயலாளர் பாஸ்டர் S. சாலமோன் அவர்கள் 08.12.2025 அன்று இரவு 9.00 மணிக்கு நடைபெற்ற செயற்குழு கூடுகையின் அறிக்கையை வாசித்து சமர்ப்பித்தார்கள். சகோதரர் Samson அவர்கள் முன்மொழிய, சகோதரர் ஏனோஸ் அவர்கள் வழிமொழிய, அந்த மினிட்ஸ் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

### மேலும் எடுக்கப்பட்ட தீர்மானங்கள்:

1. பாஸ்டர் ஜான் ரெத்தின சிங் அவர்கள் அளித்த மனு தொடர்பாக, இரு தரப்பினரையும் மார்த்தாண்டம் IPC சபையில் விசாரித்து சுமுகமான தீர்வு காணப்பட்டது. அதன்படி, இரண்டு சென்டர்களாக பிரிக்க தீர்மானிக்கப்பட்டு, பாஸ்டர் ஜான் ரெத்தின சிங் அவர்களை அருமனை சென்டர் மற்றும் பாஸ்டர் கிறிஸ்தாஸ் அவர்களை முகிலங்கரை சென்டர் பொறுப்பாளர்களாக செயல்படுத்த செயற்குழு ஏகமனதாக ஒப்புதல் வழங்கியது.

2. Pr. Pushparaj IPC Office Manager செயல்பட்டு வந்த நிலையில், தலைவர் அல்லது செயலாளரிடம் எந்த தகவலும் தெரிவிக்காமல் தன்னிச்சையாக வளாகத்தை விட்டு வெளியே சென்றது குறித்து விளக்கம் கேட்டு கடிதம் அனுப்ப தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

3. 02.12.2025 அன்று பரிந்துரைக்கப்பட்ட வாரியங்கள் முழுமை பெறாத காரணத்தினால் அவை ரத்து செய்யப்பட்டு, புதிய வாரியங்கள் 22.01.2026 அன்று தேர்வு செய்ய தீர்மானிக்கப்பட்டது. மேலும், மாநில செயற்குழுவில் இல்லாத பிற விசுவாசிகளையும் அந்த வாரியங்களில் இணைத்து செயல்பட அனுமதி வழங்கப்பட்டது.

| வ.எண் | வாரியத்தின் பெயர் (Board Name) | ஒருங்கிணைப்பாளர் (Convenor) |
|---|---|---|
| 1 | Prayer and Intercession Board ஜெப மற்றும் பரிந்துரை வாரியம் | Pr. Joy Arul Raj |
| 2 | Administrative and Credential Board (நிர்வாக மற்றும் அங்கீகார வாரியம்) | Pr. S. Solomon |
| 3 | Finance Management Board (நிதி மேலாண்மை வாரியம்) | Bro. Innacimuthu |
| 4 | Education and Church Growth Board (கல்வி மற்றும் சபை வளர்ச்சி வாரியம்) | Pr. Dr. Kingsly Chellan |

| | | |
|---|---|---|
| 5 | Mission Board (மிஷன் / தூதுப்பணி வாரியம்) | Pr. Dr. Kingsly Chellan |
| 6 | Charity and Welfare Board (தர்ம சகாயம் மற்றும் நலவாழ்வு வாரியம்) | Bro. C. J. Zeba |
| 7 | Building Construction Board (கட்டிட நிர்மாண மற்றும் பராமரிப்பு வாரியம்) | Pr. Sundarraj Johnson |
| 8 | Legal and Crisis Management Board (சட்டம் மற்றும் நெருக்கடி மேலாண்மை வாரியம்) | Pr. S. Solomon |

அந்தந்த Convenor-கள் தங்களுக்கு தேவையான Joint Convenor-களையும் Coordinator-களையும் சேர்த்து திட்டங்களை வகுத்து, அடுத்த செயற்குழு கூடுகையில் சமர்ப்பிக்க வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது. சில வாரியங்களில் செயற்குழுவால் பரிந்துரைக்கப்பட்ட Joint Convenor-களை இணைத்து செயல்படுத்தவும் முடிவு செய்யப்பட்டது.

4. Pr. Pushparaj அவர்கள் எந்த தகவலும் அளிக்காமல் தங்களின் பொறுப்புகளிலிருந்து விலகிச் சென்றதாலும், Sunday School Director பொறுப்புகளை நிர்வகிக்காததாலும், அந்த பொறுப்பிலிருந்து அவரை விடுவித்து, Pr. Prakash Vazhathopil அவர்களை 2025-2029 ஆண்டுகளுக்கான Sunday School Director ஆக நியமிக்க ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

5. Pr. Prakash Vazhathopil Sunday School Director ஆகும் பட்சத்தில், செயற்குழு உறுப்பினர் பதவியிலிருந்து விலகிக் கொள்வதாக அறிவித்ததன் பேரில், ஏற்கனவே செயற்குழு உறுப்பினராக விண்ணப்பித்திருந்த Pr. John Rathina Singh அவர்களை செயற்குழு உறுப்பினராக ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

இறுதியாக, IPC தமிழ்நாடு மாநில மூத்த போதகர் Pr. J. J. Lazar அவர்கள் ஜெபித்து ஆசீர்வதிக்க, கூட்டம் இனிதே நிறைவடைந்தது.

**உங்கள் சேவைக்காக,**

Pr. S. **சாலமோன்**
இந்தியா பெந்தெகொஸ்தே தேவசபை
தமிழ்நாடு மாநில செயலாளர்
+91 94431 95225